# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : M.C. 26/2023**

**Prosecution witness : ம.சா.2** **Date : 26.11.2025.**

| | |
|---|---|
| **Name : AMIT NANDAN** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தாரமங்கலத்தில் உள்ள இந்தியன் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணை பெற்றுக் கொண்டு அதற்கான ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன். நான் ராஜம்மாள் என்பவர் பெயரில் உள்ள சேமிப்பு கணக்கில் கடந்த 2022 லிருந்து 2025 வரை உள்ள கணக்குபட்டியல் கொண்டு வந்துள்ளேன். அது **ம.சா.ஆ.14** ஆகும். அந்த கணக்கு பட்டியலில் மாதந்தோறும் ரூ.3,000/-மோகன்ராஜ் கணக்கிலிருந்து வந்துள்ளதா என்றால் இல்லை. ராஜம்மாள் பெயரில் உள்ள பாஸ் புத்தகம் நகல் கொண்டு வந்துள்ளேன். பாஸ் புத்தகம் நகல் **ம.சா.ஆ.15** ஆகும்.

**குறுக்கு விசாரணை-**

2) பணத்தை ராஜம்மாள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறார் என்றால் வங்கியின் மூலமாகவும் எங்கள் வங்கி சார்பில் உள்ள Bio Metric மூலமாக பணத்தை எடுத்துக் கொள்வார். பென்ஷன் தொகை அவருக்கு வங்கியின் மூலம் வரவாகிறது. கணக்கிற்கு வரவாகும் தொகையை உடனே அவர் எடுத்துக் கொள்வார். ராஜம்மாள் வைத்துள்ள கணக்கு ஜன்தன் கணக்கோ அல்லது வேறுவகையான கணக்கு அல்ல. சாதாரணமாக உள்ள சேமிப்பு கணக்கு தான்.

3) சேமிப்பு கணக்கில் குறைந்த பட்ச தொகை வைத்திருக்க தேவையில்லை. குறைந்தபட்ச தொகை எவ்வளவு சேமிப்பில் வைத்திருந்தார் என்றால் ரூ.1069/-

வைத்திருந்தார். அவர் வேறு ஒரு பகுதியில் குடியிருந்தாலும் எங்கள் வங்கியில் என்ன காரணத்திற்காக கணக்கு வைத்துள்ளார் என்ற காரணம் என்னால் கூற இயலாது. இந்தியன் வங்கி ஜலகண்டாபுரத்தில் கிளை உள்ளது. மாறுவதற்கு முயற்சி செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.28 10:26:17 +0530

Judicial Magistrate No.II,
Mettur.